வணக்கம்!!, நான் அருகன்,

இத்தாலியில் கடந்த 7 வருடங்களாக பல்லின மக்களின் ஒன்று கூடலுடன் "ஒருங்கிணைந்த புதிய தலைமுறை" (UNGA) என்ற அமைப்பையும் நடத்தித் தலைமை தாங்கிவருகிறேன்.

இந்த அமைப்பானது இத்தாலியில் வாழும் வெளிநாட்டு மக்களுக்குக் குறிப்பாக இலங்கையர்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்கிவருகிறது.

- விசா தொடர்பாக (PERMESSO, CARTA, CITADINANZA, ... )
- வேலை தொடர்பாக
- கல்வி தொடர்பாக
- கடனுதவி தொடர்பாக
- ஆவணங்கள் தொடர்பாக
- கலை தொடர்பாக
- மொழி பெயர்ப்புக்கள் தொடர்பாக
- சட்ட ஆலோசனைகளுந் தீர்வுகளும்.
- தூதராலயங்களுடனான தொடர்புகளும் சேவைகளும்.
- நூல் நிலைய பணிகள்
- நிவாரணங்கள் தொடர்பான விடையங்கள்.
- கருத்தரங்குகள்
- சிறுவர் வளர்ப்புத்தொடர்பான பணிகள்
- உளவியல் தொடர்பான பணிகள்

போன்ற இன்னும் பல... இது இப்படிஇருக்க,

ஏற்கணவே பல்வேறுபட்ட வெப்தளங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்புச் சாதனங்கள் போன்றவற்றின் மூலம் எனது தமிழ் உறவுகளுடனான தொடர்பை ஏற்படுத்தியவன். அத்துடன் தமிழில் மட்டுமல்ல வேறு மொழிகழிலும் எனது ஆக்கத்தையும் பல புத்தகங்களை எழுதியும் வெளியிட்டவன். குறிப்பாக இத்தாலியில் வெளியிடப்பட்ட

- அநுபூதி (2003)
- இதுதானா மெலேனிய மாற்றம் (2005தமிழ் மற்றும் இத்தலி மொழியில்)
- நீங்களும் கணனியில் (பல பாகங்கள்2003 – 2007 வரை)
- அர்ச்சனை இதழ்கள் (தமிழ் மற்றும் இத்தாலி மொழியில்)

போன்ற ஒருசில நாவல்கள் குறிப்பிட்ட பாராட்டைப் பெற்றது.

எனினும் தொடர்ச்சியாக எனது வெளியீடுகளை மேற்கொள்வதற்குத் தடையாக நிதிநிலமை ஒத்துளைப்பும் அமைவதுண்டு. அவற்றை எப்படியோ முறியடித்து மென்மேலும் தமிழ்ச் சமுதாயத்திற்கு என்னால் உதவமுடியும் என்று கருதுகிறேன்.

*இங்கு குறிப்பிடத்தக்க விடையம் என்னவென்றால் எமது அமைப்பு வேறு தமிழ் அமைப்புக்களுடைய பக்கச் சார்புக்குள்ளாகாத காரணத்தால் ஆரம்பகாலத்தில் பலதடவை தமிழர்களாலேயே புறக்கணிக்கப்பட்ட காலங்களும் உண்டு. இதில் கவலைக்குரிய விடையம் என்ன வென்றால், தமிழ் அமைப்புக்களுஞ்சரி தமிழ் சிங்கள அரசுஞ்சரி எம்மைப் புடம்போட்டுப் பார்க்காததே. "பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை" என்று நானிருந்தேன் ஆனால் இன்னொரு பகுதி எம்மிடம் இருந்து புறப்படுவது செயற்கை வாசம் என்று பிரச்சாரஞ்செய்து தமது முகத்தில் தாமே கரியைப் பூசிக் கொண்டதும் உண்டு. இது இப்படி நிற்க...*

தற்போது எனது இருப்பிடம் இத்தாலியில் அமைவதால் இங்குள்ள சட்ட மாற்றங்கள் மற்றும் நாட்டு நடப்புகள் போன்றவற்றை இத்தாலியத் தமிழர்களுக்கும் மற்றும் உலகுக்கும்காட்ட எனது (எமது) நேரத்தை விரையம் செய்யத் தயாராக இருக்கிறேன். இச்செயற்பாடு இத்தாலிய சாதனங்களில் மேற்கொண்டு வருகிறேன் என்பது குறிப்பிடத்தக்கது.

எனது மற்றும் எமது சேவை உங்களை அழகுபடுத்தும் என்று விரும்பினால் உங்கள் பதிலுக்காகக் அமைப்போடு காத்திருக்கிறேன்.

அன்பன் – அருகன். இத்தாலியில் இருந்து.